N.PALANISELVAM

**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – தொடக்கக்கல்வி மற்றும் பள்ளிக்கல்வி இயக்ககங்களைச் சார்ந்த அரசுப் பள்ளிகளில் இணைய வசதி ஏற்படுத்துதல் – உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கட்டணம் செலுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக்கல்வித்(தொக3(2))துறை**

அரசாணை (நிலை) எண்.55

நாள் 10.03.2025
திருவள்ளுவர் ஆண்டு–2056
குரோதி வருடம், மாசி 26
படிக்கப்பட்டவை: –

1 அரசாணை (நிலை) எண்.155 பள்ளிக்கல்வித் (தொக3(2)) துறை, நாள் 17.09.2022.
2 அரசாணை (நிலை) எண் 217, பள்ளிக்கல்வித் (தொக3(2)) துறை, நாள் 19.12.2022.
3 அரசாணை (நிலை) எண் 165, பள்ளிக்கல்வித் (தொக3(2)) துறை, நாள் 26.09.2023.
4 அரசாணை (நிலை) எண். 142, பள்ளிக்கல்வித் (அகஇ(1)) துறை, நாள் 11.10.2021.
5 அரசாணை (நிலை) எண். 144, பள்ளிக்கல்வித் (அகஇ(1)) துறை, நாள் 25.08.2022.
6 அரசாணை (நிலை) எண்.132, பள்ளிக்கல்வித் (அகஇ(1)) துறை, நாள் 28.07.2023.
7 பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித எண். 022404 / பிடி1/இ3/ 2024, நாள் 30.04.2024.

/•/

ஆணை: –

2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024–ஆம் ஆண்டுகளுக்கான பள்ளிக்கல்வித் துறை மான்யக் கோரிக்கையின் போது பிறவற்றினிடையே மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அரசு தொடக்கப் பள்ளிகளில் திறன் வகுப்பறைகளும் (Smart Class Rooms) மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்பக் கணினி ஆய்வகங்களும் (Hi –Tech Labs) ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

2. மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாட்டில் 2022–23 மற்றும் 2023–2024 –ஆம் கல்வியாண்டில் அரசு தொடக்கப் பள்ளிகளில் திறன் வகுப்பறைகள் (Smart Class Rooms) ஏற்படுத்திடவும் மற்றும் 2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் கல்வியாண்டில் அரசு நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hi –Tech Labs) அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ள அனுமதியளித்து மேலே ஒன்று

Padasalai.Net

முதல் ஆறு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. தமிழ்நாட்டில் தொடக்கக்கல்வி இயக்ககத்தின்கீழ் 24338 அரசு தொடக்கப் பள்ளிகளும், 6992 அரசு நடுநிலைப் பள்ளிகளும், பள்ளிக்கல்வி இயக்ககத்தின் கீழ் 3094 அரசு உயர்நிலைப் பள்ளிகளும், 3,129 (39 மாதிரிப் பள்ளிகள் நீங்கலாக) அரசு மேல்நிலைப் பள்ளிகளும் என மொத்தம் 37,553 அரசு பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு அரசாணைகளின்படி திறன்மிகு வகுப்பறைகளும், உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள பள்ளிகளில் ஏற்படுத்தும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

4. உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மற்றும் திறன் மிகு வகுப்பறைகள் புதியதாக அமைக்கப்பட உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 100 Mbps இணைய வசதி (Internet facility) ஏற்படுத்துவதற்கு பள்ளிக்கல்வித் துறை செயலர் அவர்களின் தலைமையில் BSNL நிறுவனத்துடன் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்திட, கீழ்க்காணும் இனங்களுக்கு அனுமதியும் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும் மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

Padasalai.Net

i. One Time Charges (OTC) தொகை எதிர்வரும் 12 மாத கட்டண ரசீதில் சேர்த்து கொள்ளப்பட உள்ளதால், நிர்ணயிக்கப்பட்ட இணைய கட்டணத்துடன் சேர்த்து One Time Charges (OTC) செலுத்த நிதி வழங்க வேண்டியுள்ளது.

ii. 64 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 2,000 –ற்கும் மேல் மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். 28 தகைசால் பள்ளிகளில் பள்ளி ஒன்றிற்கு 9 உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களும், 18 திறன்மிகு வகுப்பறைகளும் வழங்கப்பட உள்ளன இப்பள்ளிகளில் 100 Mbps இணைய வசதி (Internet facility) போதுமானதாக இல்லை என்பதால் இப்பள்ளிகளுக்கு 1 Gbps இணைய வசதி அவசிய தேவையினை கருத்தில் கொண்டு 1 Gbps இணைய வழங்க நிதி வேண்டியுள்ளது.

iii. 24,338 அரசு தொடக்கப் பள்ளிகளுக்கு இணைய வசதி பெறுதல் மற்றும் 14,665 அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு Installation – One Time Charges ஆகிய பணிகள் மேற்கொள்ள நிதி வேண்டியுள்ளது.

iv. 4,934 அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு Installation – One Time Charges பணி மேற்கொள்ள நிதி வேண்டியுள்ளது.

தேவைப்படும் நிதி விவரம்

| வ.எண். | பள்ளிகள் வகை | தொகை (கோடியில்) |
|---|---|---|
| 1 | தொடக்கக்கல்வி இயக்ககம் | 165.4076 |
| 2 | பள்ளிக்கல்வி இயக்ககம் | 23.7050 |
| | மொத்தம் | 189.1126 |

5. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்கு பின், தொடக்கக்கல்வி மற்றும் பள்ளிக்கல்வி இயக்கங்களைச் சார்ந்த அரசு பள்ளிகளுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இணைய வசதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

அ) பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட இணைய வேகம்:

| வ.எண் | பள்ளிகள் | இணைய வேகம் |
|---|---|---|
| 1 | தொடக்கப் பள்ளி | 50 Mbps |
| 2 | நடுநிலைப் பள்ளி | 100 Mbps |
| 3 | உயர்நிலைப் பள்ளி | 100 Mbps |
| 4 | மேல்நிலைப் பள்ளி | 100 Mbps |
| 5 | தகைசால் பள்ளி | 1 Gbps |

Padasalai.Net

ஆ) அரசு பள்ளிகளுக்கான இணைய வசதிக் கட்டணத்தை அரசு பள்ளிகள் அமைந்துள்ள சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளே (ஊரக/ நகராட்சி/ மாநகராட்சி) செலுத்த வேண்டும்.

இ) பேரூராட்சி ஆளுகைக்குட்பட்ட அரசு பள்ளிகளுக்கான இணைய வசதி கட்டணத்திற்காக தேவைப்படும் தொடர் செலவினம் ரூ.5.49 கோடி (ரூபாய் ஐந்து கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சம் மட்டும்) மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

6. இணைய சேவை வழங்குவதற்கான ஒரு முறை கட்டணத்தை (OTC) பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) நிருவாகத்தோடு கலந்து பேசி கட்டணத்தை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மற்றும் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் (TANFINET) இணையதளம் தமது சேவைகளை வழங்க தொடங்கும் போதெல்லாம் சம்மந்தப்பட்ட பள்ளிகள் அதனை பயன்படுத்திக் கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

7. மேலே பத்தி 5-(இ)ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:-

2202 பொதுக்கல்வி - 01 தொடக்கக் கல்வி - 101 அரசு தொடக்கப் பள்ளிகள் - JL அனைத்து வகையான அரசு பள்ளிகளுக்கும் நிர்வாக செலவு - 381 வலைபின்னல் மற்றும் இணைப்புகள் - 01 வலை பின்னல் (த.தொ.கு.2202 01 101 JL 38101)

8. மேலே பத்தி 5-(இ)ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2025-26-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டிலிருந்து பெற்று மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களுக்கு வழங்கிட பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

9. தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக்கல்வி இயக்ககங்களைச் சார்ந்த அரசு பள்ளிகளில் இணைய வசதி மற்றும் நிறுவுதல் (Installation) பணிகளை நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் விதிகளுக்குட்பட்டு மேற்கொள்ளுமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அ.சா.எண். 980/2024, நாள் 29.06.2024, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அ.சா.எண்.980/மாந-1/2024, நாள் 15.10.2024 மற்றும் நிதித்துறையின் அ.சா. எண். 980/கல்வி-II/2024, நாள் 06.03.2025-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B.
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காய்வுத்தலைவர், சென்னை 18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) நந்தனம், சென்னை-35.

Padasalai.Net

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலக நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் (ம)குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
10.3.25